**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 154** **நாள்: 01.11.2017**

## பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இல்லங்களிலிருந்து 1 லட்சத்து 80ஆயிரம் கிலோ கிராம் மட்காத குப்பைகள் பெறப்பட்டுள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளிலிருந்து புதன்கிழமை மட்டும் மட்காத குப்பைகளையும், பிற நாட்களில் மட்கும் குப்பைகளையும் பெறும் பணி அக்டோபர் 2, 2017 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அதனைத் தொடர்ந்து இன்று மட்டும் (01.11.2017) இல்லங்களிலிருந்து 1 லட்சத்து 80ஆயிரம் மட்காத குப்பைகள் பெருநகர சென்னை மாநகராட்சி துப்புரவு பணியாளர்களால் நேரடியாக சென்று பெறப்பட்டுள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

திடக்கழிவு மேலாண்மை விதிகள்–2016ன்படி பெருநகர சென்னை மாநகராட்சி அனைத்து மண்டலங்களிலும் புதன்கிழமை நீங்கலாக அனைத்து நாட்களிலும் மட்கும் குப்பைகளை சேகரிக்கவும், மட்காத குப்பைகளை புதன்கிழமை அன்று மட்டும் சேகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு துண்டு பிரசுரங்கள் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. சேகரிக்கப்படும் குப்பைகளை தரம் பிரித்து மட்கும் குப்பைகளை அந்தந்த பகுதிகளிலேயே இயற்கை உரமாக்கவும், மட்காத குப்பைகளை அதற்கென உள்ள வணிகர்களிடம் மறுசுழற்சிக்கு அளித்தும், மெல்லிய பிளாஸ்டிக் போன்ற கழிவுகள் சிறு துகள்களாக்கப்பட்டு பிளாஸ்டிக் சாலை பணிகளில் பயன்படுத்தப்படவும் உள்ளது.

மேலும், அன்றாடம் 100 கிலோவிற்கு மேலாக அதிகளவு குப்பைகளை உற்பத்தியாக்கும் வணிக வளாகங்கள், திருமண மண்டபங்கள், அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடங்கள் (Bulk Waste Generators) ஆகியவற்றிற்கு அறிவிக்கைகள் தனியாக அனுப்பப்பட்டு குப்பையை அந்தந்த இடங்களிலேயே மேற்கண்ட நிறுவனங்களின் சொந்த பொறுப்பில் உரமாக்குதல் பதனிடுதல் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மண்டல வாரியாக பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மட்காத குப்பைகளின் விவரம்

| **மண்டலம்** | **பெறப்பட்ட மட்காத குப்பைகள் (கிலோகிராம்)** |
|---|---|
| திருவொற்றியூர் | 27,273.3 |
| முணலி | 40.159 |
| மாதவரம் | 15,312 |
| தண்டையார்பேட்டை | 8,680 |
| இராயபுரம் | 1,350 |
| திரு.வி.க.நகர் | 4,460 |
| அம்பத்தூர் | 7,828 |
| அண்ணாநகர் | 5,670 |
| தேனாம்பேட்டை | 3,768 |
| கோடம்பாக்கம் | 10,997 |
| வளசரவாக்கம் | 16,176 |
| ஆலந்தூர் | 6,875 |
| அடையாறு | 12,075 |
| பெருங்குடி | 7,293 |
| சோழிங்கநல்லூர் | 12,093 |
| **மொத்தம்** | **1,80,009.3 கி.கி (180.01 மெ.டன்)** |

பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் 100 சதவீத திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்திற்கு பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கி தூய்மையான சென்னையாக மாற்றிட முன்வரவேண்டும் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**